**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**O.S. No.164/2023**

**20.03.2025**

**P.W.1- சிவபாண்டீஸ்வரி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் முதலில் கிரையம் பெற்றேன், அதன்பின்பு அதே சொத்தை 2வதாக பிரதிவாதிகள் கிரையம் முடித்துள்ளார்கள். அதனால் எனது சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தானது எனக்கு எனது பெரியம்மா மாயக்காள் தானசெட்டில்மென்ட் கொடுத்ததன அடிப்படையில் பாத்தியமானது ஆகும். அங்கம்மாள் எனது சித்தி ஆவார். தாவா சொத்துக்களும் மற்றும் பிற சொத்துக்களும் ஆதியில் கோடாங்கிமாயாண்டித்தேவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். கோடாங்கிமாயாண்டித்தேவருக்கு 3 ஆண் பிள்ளைகள், 3 பெண் பிள்ளைகள் உள்ளனர். அதில் எனது அம்மா, பெரியம்மா, சித்தி ஆவார்கள். 12.03.1990ம் தேதி மேற்படி எனது அம்மா, பெரியம்மா, சித்தி ஆகியோர்கள் சேர்ந்து அவரது சகோதரரான ராசு (எ) ஒய்யாத்தேவர், மாயாண்டி ஆகியோர்களுக்கு பொது பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணம் சரிதான். மேற்படி ஆவணத்தில் கோடாங்கி மகன் பெரியகருப்பன் 4வதாக கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரத்தின் படி தாவா சொத்து பெரியகருப்பனுக்கு டி அட்டவனை சொத்தாக கிடைக்கப்பெற்றுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் பெரிய கருப்பன் கைரேகை வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி அசல் ஆவணம் எனது கைவசம் தான் உள்ளது. அதை தாக்கல் செய்யலாம். மேற்படி உயில் ஆவணத்தில்

சிவமணியும், சுப்புவும் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார்கள், அவர்கள் இறந்துவிட்டார்கள். மேற்படி உயில் ஆவணத்தை எழுதிய ஜெகதீசன்,



பத்திர எழுத்தர் உயிருடன் உள்ளார் என்றால் தெரியாது. வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தை நிரூபிக்கும் பொருட்டு எனது தரப்பில் ஏதாவது சாட்சிகள் உள்ளதா என்றால் சாட்சிகளை விசாரிக்கலாம். வா.சா.ஆ.3 எழுதிய பெரியகருப்பன் திருமணம் செய்யவில்லை என்றால் சரிதான். அவரது கடைசி காலத்தில் உடல்நிலை குறைவு ஏற்பட்டு எனது பெற்றோர்கள் வீட்டில் படுக்கையாக இருந்தார் என்றால் சரிதான். பெரியகருப்பன் 18.11.1999ல் இறந்துவிட்டார். வா.சா.ஆ.3 உயில் ஆவணமானது அவர் இறப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்பாக எழுதப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 உயில் ஆவணம் தாவா சொத்தை அபகரிக்க சுயநினைவில்லாத பெரியகருப்பனின் கைரேகையை மட்டும் வைத்து நாங்களாக உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. ஏற்கனவே எனது பெரியம்மா, எனது அம்மா, சித்தி ஆகியோர்கள் பாக விடுதலை எழுதி கொடுத்தபின்பு மீண்டும் இறந்து போன பெரியகருப்பன் மேற்படி சகோதரிகளுக்கு உயில் சாசணம் எழுத அவசியமில்லை, ஆகையால் உயில் ஆவணத்தை நாங்களாக எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 முதல் 8 வரையிலான ஆவணங்கள் நான், எனது பெரியம்மா, சித்தி ஆகியோர்களுக்கு இடையே ஒரே தேதியில் தானசெட்டில்மென்ட் பத்திரம் பெரியகருப்பன் இறந்து 8 ஆண்டுகள் கழித்து எழுதப்பட்ட மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. அவ்வாறு எங்களுக்குள் தானசெட்டில்மென்ட் எழுதி வேண்டிய காரணம் என்னவென்றால் தெரியாது. மேற்படி எனது அம்மா, பெரியம்மா, சித்தி ஆகியோர்கள் அவர்களுக்குள் பாக விஸ்தி ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் மாயக்காளிடமிருந்து கிரையம் வாங்கினேன். மேற்படி செட்டில்மென்ட் பத்திரத்தில் 1-3 பங்கு என தான் எழுதிக்கொடுத்துள்ளார்கள், பாகமானதாக எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். மாயக்காள் என்பவருக்கு தானசெட்டில்மென்ட் எழுதிக்கொண்ட 4 நாட்கள் கழித்து 26.11.2017ம் தேதி நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்தை அபகரிக்கும்

நோக்கில் ஒரே தேதியில் மாற்றி மாற்றி ஆவணங்கள் எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. 12.03.1990ம் தேதி கோடாங்கி (எ) மாயாண்டித்தேவருக்கு ஏ செட்டியூல் சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஏ செட்டியூல் சொத்தை 1, 2 வாதிகள் மற்றும் மாயக்காள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி



கோடாங்கி (எ) மாயாண்டித்தேவர் இறந்த பின்பு அவருக்கு பாத்தியப்பட்ட மேற்படி ஏ செட்டியூல் சொத்தை 1, 2 வாதிகள் மற்றும் மாயக்காள் ஆகியோர்கள் விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் தெரியாது. மேற்படி கோடாங்கி (எ) மாயாண்டித்தேவர் உயிருடன் இருக்கும்போது 1, 2 வாதிகள் மற்றும் மாயக்காள் எடுத்துக்கொண்டனர் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.3 உயில் ஆவணமானது மோசடியானது என்றாலும், அது நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பெரியகருப்பன் திருமணம் முடிக்காமல் இறந்ததால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்து அவரது சகோதரர்களுக்கு வந்தடைந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்தை 2ம் பிரதிவாதியும், அவரது சகோதரர் ராசு (எ) ஒய்யாத்தேவர் தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்றும், நாங்கள் அனுபவம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு ராசு (எ) ஒய்யாத்தேவருக்கு மேற்படி சொத்து பாத்தியமானதால் தான் 1ம் பிரதிவாதிக்கு கடந்த 27.11.2011ம் தேதி தானசெட்டில்மென்ட் மூலம் தாவா சொத்தில் 5 சென்ட் இடத்தை எழுதிக்கொடுத்துள்ளா் என்றால் சரிதான். 02.08.2013ம் தேதி மேற்படி தானசெட்டில்மென்ட் மூலம் கிடைத்த சொத்தை நக்கலப்பட்டி கிராமம், மாதரை காளியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் ஞானகுருசாமி மகன் வாசுபாண்டி என்பவருக்கு கிரையம் உடன்படிக்கை எழுதிக்கொண்டார் என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் 3வது பிரதிவாதிக்கு அவருக்குரிய பங்கை தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். 1, 3 பிரதிவாதிகள் தான செட்டில்மென்ட் மூலம் அனுபவம் பெற்று அவர்கள் தான் தற்போதும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் உண்மையை

மறைத்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.